ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

ஆர்ய தர்மம்.

नरातंकोत्तङ्कः शरणशरणो भ्रान्तिहरणो
घनश्यामो वा मा व्रज शिशुवयस्योऽर्जुनसखः ।
स्वयंभूर्भूतानां जनक उचिताचारसुखदः
शरण्यो लोकेशो मम भवतु कृष्णोऽक्षिविषयः ॥ कृष्णाष्टकम् ।

நராதங்கோத்தங்க: ஶரணஶரணோ ப்ராந்திஹரணோ
வநஶ்யாமோ வா மா வ்ரஜ ஶிஶுவயஸ்யோzர்ஜுநஸக: ।
ஸ்வயம்பூர்பூதாநாம் ஜநக உசிதாசாரஸுகத:
ஶரண்யோ லோகேஶோ மம பவது க்ருஷ்ணோzக்ஷிவிஷய: ॥
க்ருஷ்ணாஷ்டகம் ।

மானிடர்களுக்கேற்படும்ஸகல துக்கங்களையும் போக்கடிப்பவரும் தம்மைச் சரணமாகவடைந்தோரை தாம் சரணமாக அடைகிறவரும் இதினால் சரணாகதியாக அடைந்தவர்களிடம் பகவானுக்கிருக்கும் கருணையை வெளியிடுகிறார் யாருக்கு எவ்விதமான பிரமமிருந்தாலும் அதை அபகரிப்பவரும் நீருண்டிய மேகம்போல்கருத்ததிருமேனியையுடையவரும் யாதவஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் ஸுகிருத்தாயும் அர்ஜுனனுக்கு ஸகாவாயும் பிறப்பிறப்பற்றவராயும் ஸகலப்பிராணிகளுக்கும்பிதாவாயும்சாஸ்திரவிதிக்குமாறுமல் தம் தம் தர்மங்களை நன்கனுஷ்டிப்போர்களுக்கு சுகத்தைக் கொடுப்பவரும் எல்லாவுலகங்களுக்கும் ஈசனாய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் என் நேத்திரங்களுக்குப் பிரத்தியக்ஷமாகக்காக்ஷியளித்து அனுக்ரஹிக்கவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

ஒரு பக்தர் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவினுடைய தர்சனத்தையும் அனுக்ரஹத்தையும் பெறவேண்டி பகவானைப் பிரார்த்தித்தால் ஒரு ஸமயம் உன் கோரிக்கையைப் பூர்த்திசெய்யும் சக்தி எனக்கில்லை என்று பகவான் நம்மை ப்பரீக்ஷை செய்தாலும் அதற்கிடங்கொடாமல் முந்தியே என் விருப்பத்தைக் காட்டிலும் அதிகமாகச் செய்யக்கூடிய சக்தி உமக்கிருக்கிறதென்பதை நான் அறிந்துதான் பிரார்த்திக்கிறேனென்று என்னைப் பரீக்ஷிக்காமல் அனுக்கிரஹிக்க வேண்டுமென்று பல விசேஷணங்களால்போற்றிப் பிரார்த்திக்கிறார்.

உப-பத்திராதிபர்,

ஆத்மாநாத்ம விவேகம்.

(௲சO-வது பக்கத் தொடர்ச்சி)

சிஷ்:—மோதமென்றால் என்ன ?

குரு—இஷ்ட வஸ்துவை அடைந்ததால் உண்டாகும் ஸந்தோஷம் மோதமென்று கூறப்படுகின்றது. இதையே அதிகமாக ஏற்பட்டால் ப்ரமோதமென்று சொல்லுவார்கள். இங்கு நிரூபிக்கப்பட்ட கொசங்களுக்குள் விக்ஞானமயகோசம் ஞான சக்தியையுடையது கர்த்ருரூபமாக ஆகிறது. இச்சாசக்தியை யுடைய மநோயகோசம் காரணரூபம். கிரியாசக்தியையுடைய பிராணமய கோசம் கார்யரூபம், இந்த மூன்றுகோசங்களும் சேர்ந்து சூக்ஷ்மசரீரமென்று சொல்லப்படுகின்றது. இந்த சரீரத்ரயத்திற்கும் வேறாக ஆத்மா ஆகின்றது என்பதை நிரூபித்து அவஸ்தாத்ரயத்திற்கும் ஸாக்ஷியாகிறான் என்றும் கூறப்படுகின்றது.

சிஷ்:—அவஸ்தாத்ரய மென்றால் என்ன ?

குரு:—ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி என்கிற இம்மூன்றுகளே, இம்மூன்று அவஸ்தைகளிலும் தான் யாதொரு விகாரத்தையும் அடையமுடியாதவனுய்க் கொண்டு ஸாக்ஷியாயிருந்து ஸகலத்தையும் அறிகிறான். ஆகையால் ஆத்மாபஞ்சகோச விலக்ஷணனாகிறான்.

சிஷ்:—ஹே ஸ்வாமிந் ஆத்மா பஞ்சகோச விலக்ஷணன் என்பதை திருஷ்டாந்தவாயிலாக அறிவித்தால் நான் அறிந்துகொள்ள முடியும்.

குரு:—என்னுடைய மாடு, என்னுடைய கன்று என்னுடைய புத்திரன், என்னுடைய புத்திரி, என்னுடைய ஸ்திரீ என்பது

முதலான பதார்த்தங்களையுடையவனாக ஆன்மா ஆகமாட்டான். இவைகளைக் காட்டிலும் வேறானவன். அவ்விதமே என்னுடைய அன்னமயகோசம், என்னுடைய பிராணமயகோசம் என்னுடைய மனோமயகோசம், என்னுடைய விக்ஞானமய கோசம், என்னுடைய ஆனந்தமய கோசம், என்கிற இந்த பஞ்சகோசத்தையுடையவனாகவும் ஆகமாட்டான். இவைகளைக் காட்டிலும் விலக்ஷணனாயும் ஸாக்ஷியாயும்விளங்குகிறான் இவ்விதமேசுருதியிலும் ஸ்பஷ்டமாய்க்கூறப்பட்டிருக்கின்றது.

சிஷ்:—ஆத்மாவை ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகக் கருதுகின்றார்களே. ஸத்ரூபமெனறால் என்ன?

குரு:—ஒன்றாலும் பாதிக்கப்படாமலும் மூன்று காலங்களிலும் விகாரத்தையடையாமல் ஒரே ரூபமாய் இருப்பதே ஸத்ரூபமாகும்.

சிஷ்:—சித்ஸ்வரூபமென்றால் என்ன?

குரு:—வேறான ஸாதனங்களை அபேக்ஷிக்காமல் தானாகப் பிரகாசிப்பதும் தன்னிடத்தில் ஆரோபிக்கப்பட்ட ஸகல பதார்த்தங்களுடைய அவபாஸகத்தையுடையதும் சித்ரூபமாகும்.

சிஷ் —ஆனந்தரூபமென்றால் என்ன ?

குரு:— மிகவும் அதிசமான பிரேமைக்குப் பிடிப்பாயும் என்றும் அழிவில்லாததாயும் இரண்டாவதற்றதாயும் இருப்பது ஆனந்த ஸ்வரூபமாகும். இவைகளும் சுருதிகளில் பலவிடங்களில் ஸ்பஷ்டமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன இவ்விதம் நித்யனுயும்சுத்தனுயும்ஞானரூபனுயும் ஒருவித பந்தமுமில்லாதவனுயும் விளங்கும். ஆத்மஸ்வரூபமாக நான் ஆகிறேன்என்று ஸம்சயம் முதலான தோஷங்களற்றவனுய்க் கொண்டு எவன் அறிகிறானே அவன் ஜீவன் முக்தனாக ஆகிறான் என்று நம் பரமாசார்யரவர்கள் கருணையால் ஸகல ஜனங்களும்தன்யர்களாக வேண்டி வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் அவரவர்களும் தங்கள் சக்திக்கியன்றவரையில் ஆசாரியாளால் அறிவிக்கப்பட்ட ஸாதனங்களை அனுஷ்டித்து நற்கதிபெற முயல வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆத்மாநாத்ம விவேகம் முற்றிற்று.

உப- பத்திராதிபர்

ஒற்றுமை.

ஒற்றுமை ஒன்றியிருக்கும் தன்மை. ஒரு மனப்படல் என்றும் பொருள்படும். அஃதாவது ஒருவன் தான் எவருடன் ஒற்றுமைகொண்டு வாழவிரும்புகின்றானோ அவரது கருத்துப்போலவே தனது கருத்தும் அமைந்திருக்குமாறு பார்த்துக்கொள்ளல்.

ஒற்றுமை ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்துக்கொள்வதால் உறுதியாகும்; பிழைகளைப் பொறுத்து மன்னித்து விடும் குணம் வளர்வதால் நிலைத்து நிற்கும். புறம்பழித்தல், பிறர் சொற்கேட்டல், தன்னலம் பேணல் முதலிய தீக்குணங்களைப் பெற்றிராதவரே ஒற்றுமையாய் வாழ்வதற்கு உரியவர் ஆவர்.

ஒற்றுமை, தன்னை உடையவர்களுக்கு இன்பத்தை அளிக்க வல்லது; துன்புற்ற காலத்திலே துணையாக நிற்பது; ஆற்றலைப் பெருக்குவது; அன்பை வளர்ப்பது; அஞ்சாமையை அளிப்பது; அரிய செயலையும் எளிய செயலாக்குவது; ஊக்கத்தை உயர்த்துவது; உழைப்பைச் சிறப்புறச் செய்வது; உபகார சிந்தனையை உண்டாக்குவது.

எறும்புகள் ஒன்று சேர்ந்து மிகப்பருமனான உணவுப் பொருள்களை இழுத்துச் செல்லுகின்றன. பறவைகள் ஒற்றுமையோடிருந்தமையால் தாங்கள் சிக்கிக்கொண்ட வலையோடுபறந்து சென்று உயிர்பிழைத்தன. பலர் ஒற்றுமை கொண்டு இழுப்பதனால் மிகப்பெரிய தேர்களும் வீதிவலம் வருகின்றன.

ஓர் ஊரில் ஒரு கிழவன் இருந்தான் அவனுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒற்றுமை இல்லாமல் நாள்தோறும் சண்டைசெய்து கொண்டிருப்பார்கள்.

கண்டான் தந்தையாகிய கிழவன் எப்படியாவது தன்னுடைய பிள்ளைகளை ஒற்றுமை கொண்டவர்களாக்க எண்ணினான்; பலமுறை களவற்புறுத்திப் புகட்டினான்; ஒற்றுமையின் உயர்வை விரித்துக் கூறினான். எவ்வளவு தான் சொல்லியும் கேளாமற்போனார்கள். கிழவன் செய்த உபதேசங்கள் விழலுக்கு இறைத்த நீராயின.

என்ன செய்வான் கிழவன்! பல நாட்கள் ஆலோசனை செய்தான். ஒரு யுக்தி தோன்றியது தோன்றலும், தன்னுடைய பிள்ளைகளை அழைத்தான்; எதிரே நிற்கச்செய்தான்; தான் முன்னமே திட்டம் பண்ணிவைத்திருந்த மிகவும் குட்டையான ஒரு விறகுகட்டை அவர்கள் முன்னே வைத்தான்; பிள்ளைகளைப் பார்த்து "மக்காள் உங்களில் எவராலேனும் ஒன்றியாக இந்த விறகுகட்டை முறித்துவிடமுடியுமா? முடியுமானால் முறியுங்கள் பார்ப்போம்" என்றனன்.

அவர்கள் தகப்பனாரது சொல்லின்படியே தனித்தனியாகத் தங்களால் இயன்றமட்டும் முயன்றுபார்த்தார்கள்; விறகுகட்டை முறிக்க இயலாதவர்கள் ஆனார்கள்.

பார்த்தான் கிழவன் மனத்தில் சிறிது மகிழ்ச்சி தோன்றியது. விறகுகட்டை அவிழ்க்கச் சொன்னான்; ஒவ்வொருவன் கையிலும் ஒவ்வொன்றாகக் கொடுத்தான்; "மக்காள், இப்பொழுது முறியுங்கள், முறித்து விடலாம் என்று சொன்னான்.

சொல்லலும் அவர்கள் அங்ஙனமே தனித்தனி ஒவ்வொன்றாக முறிக்கலுற்றார்கள். மிக எளிதாக முறித்துப் போட்டார்கள்.

கிழத்தந்தை அதனைக்கண்டான்; உள்ளம் பூரித்தான்; 'தனது கருத்து நிறைவேறிவிடும்' என்று கருதினான்; மக்களைப் பார்த்து "பிள்ளைகளே, இந்த விறகு கட்டு ஒன்றாக இருந்தபொழுது நீங்கள் முறித்துப் பார்த்தீர்கள் அஃது உங்களால் முறிக்கப்படவில்லை. இப்பொழுது கட்டை அவிழ்த்துத் தனித்தனியே அதிலிருந்த விறகுகள் பிரிந்தபொழுது மிகஎளிதில் உங்களால் முறிக்க இயன்றன. நீங்களும் முறித்துவிட்டீர்கள. இதனால் விளங்கும் நீதி யாது? நீங்கள் எல்லாரும் உங்களுக்குள் எள்ளளவும் மனவேறுபாடின்றி ஒற்றுமையோடிருப்பீர்களானால் பெரிதும் வாய்ந்தவர்கள் ஆவீர்கள் எனபது விளங்கவில்லையா? ஆதலின். இனி நீங்கள் அனைவரும் ஒருவரோடொருவர் பகைமை கொள்ளாமல் ஒற்றுமையுடன் பாலும்நீரும் போல பழகி வருவீர்களாக அங்ஙனம் இருப்பின் உங்களைப்பிறரால் வஞ்சனைசெய்து வென்றுவிடமுடியாது என்றும் பலத்துடன் வாழ்வீர்கள்

இன்றேல் நரியின் பேச்சால் புத்திமாரிப் பிரிந்துபோய்ச் சிங்கத்தால் கொல்லப்பட்டு இறந்து போன நான்கு எருதுகளின் கதை

யாக முடியும் உங்களது வாழ்க்கை" என்று கூறி முடித்தான். முடித்தலும், கிழவனது எண்ணம் வீணாகவில்லை. பிள்ளைகள் தந்தையாரின் உபதேசத்தை ஊன்றி அறிந்தார்கள். ஒற்றுமையின் உயர்வினை உணர்ந்தார்கள்; 'தாங்கள் இதுவரையில் செய்துவந்தது பிழைபாடுடையது' எனபதை உணர்ந்தார்கள், அன்று முதல் தந்தையாரின் உபதேசத்தை மறவாமல் பின்பற்றினார்கள்; அச்சமின்றி இன்புற்று வாழ்ந்தார்கள். தந்தையாகிய கிழவனும் உள்ளம் பூரித்தான்.

"சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை"

தண்டமிழ்த்தோண்டன்,

ஸந்தியாவந்தன விமரிசம்.

இப்பாத கண்டத்தில் பிரபஞ்ச சிருஷ்டி முதல் பிராமணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் ஆகிய மூன்று வர்ணத்தார்களாலும் அவரவர்கள் த்விஜன்மத்துக்கு அறிகுறியான உபநயந காலம் முதல் வேதோக்தமாகிய ஸந்தியாவந்தனத்தை நித்யகர்மாவாக அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். மஹத்தான யுத்தகாலம் ராஷ்டரக்ஷோபங்களிலும்கூட 'இந்தக் கர்மாவை ரொம்ப சிரத்தையுடன் கொண்டாடினதாகத் தெரிகிறது. கலியுகம் பிறந்து 4000 வருஷத்துக்குப் பிறகு க்ஷத்திரிய வம்சராஜாங்கம் நசித்ததும் முதல் வர்ணஸ்தர்களான பிராமணர்கள் துஷ்டர்களுக்குப் பயந்து வாஸம் செய்த காலமாகிய சுமார் 200 வருஷத்துக்குமுன் வரையில் வைதீக கர்மங்களுக்கு முக்கிய அங்கமான ஸந்தியாவந்தனத்தை அனுஷ்டித்து வந்தனர்.

कलौ पञ्चसहस्रान्ते जायते वर्णसङ्करः ।

கலௌ பஞ்சஸஹஸ்ராந்தே ஜாயதே வர்ணஸங்கர: ।

கலிபிறந்து ஐயாயிரம் வருஷத்திற்குமேல் வர்ணங்களுடைய ஸங்கிரமணம் உண்டாய் ஒன்றுக்கொன்று கலந்து வ்யவஸ்தை இல்லாமல் போகுமென்று ஒருவர் சொல்லியிருப்பதை வீணாக்

காமல் சில லௌகிகப் பிரபுக்கள் காரியத்தின் நிர்ப்பந்தத்தாலும் தத்கால பாஷாந்தரத்தை அப்யஸிக்கும் வித்யார்த்திகள் அலக்ஷியத்தாலும் வைதீக வம்சத்தில் உதித்த சிலபிராமணர்கள் ஸந்தியாவந்தனத்தால் யாதொரு பலனும் உண்டாவதில்லையென்கிற துக்கத்தாலும் போஜனத்துக்குத் தயாரானவுடன் சின்னப் பாத்திரத்தில் ஜலத்தை வைத்துக்கொண்டு கை, கால், நனையாமலும் ஜலம் அதிகமாகச் சிலவழியாமலும் பலவித யோசனை ஸல்லாபங்களுடன் தொலைய வேணுமேயென்று செய்துவிட்டுப்போவதைக் கிரமாந்தரங்களிலும்கூடப் பிரத்தியக்ஷமாகக் காணலாம் அநேகம் பேர்களுக்கு ஸாயங்கால ஸந்தியாவந்தனம் என்பது இஷ்டர்களுடன் வெளியில் போய்வருவது என்றுதான் தெரியும். இது ஸாங்கிராமிகம். அளர்க்கம் முதலிய ரோகம் போல் ஸகல தேசங்களிலும் விசேஷமாகப் பிராமணச் சிறுவர்களிடம் அதி சீக்கிரமாய் பாவி வருகிறது. இந்த முக்கிய கர்மாவை இன்னதற்காகச் செய்து வருகிறோமென்று அர்த்தமில்லாமல் செய்யும் காலத்தின் வேகமானது நவீன நாகரீக யந்த்ரங்களான ரயில் தந்தி டெலிபோன் ஒயர்லஸ் போன்றவைகளையும் தோற்கச் செய்கிறது. இப்படி அநியாயமாய் பிராமணர்களின் முக்கிய கர்மம் நசித்து வருவதை யோசித்துத் தற்காலம் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடத்தில் ஜகத்குருவாய் விளங்கிவரும் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் விஜயயாத்திரை முகாம் செய்யும் இடங்கள் தோறும் ஸந்தியாவந்தனத்தைப் பிராமணர்களில் சிறுவர்கள் முதல் விருத்தர்கள் வரையில் அர்த்தத்தையும் தெரிந்துகொண்டு நியமத்துடன் கட்டாயம் அனுஷ்டிக்கவேணுமென்றும் அதன் விசேஷகுணங்களை உபதேசம்பண்ணிப் பிரஸங்கம் புரிந்தும் வருவதாய் கேள்வி பட்டு ஆனந்திக்கிறோம். முன்காலத்தில் வேதங்களுக்கும் உபநிஷத்துக்களுக்கும் மதவிரோதிகளால் அபாயம் நேரிட்டதை உணர்ந்து பகவதம்சரூபாளான ஆசாரியாள் அவதரித்துத் துர்வாதங்களைப் போக்கடித்து வைதிக மதத்திற்குப் பெருத்தஆதரவளித்திருக்கிறார்கள் கலி: ஸாது: கலி: ஸாது: நான்கு யுகங்களுள் வர்ணாசிரம தர்மம்முற்றிலும் தவறியது கலியுகம் அப்படியிருந்தும் பஞ்சாக்கினி மத்தியில் இருந்து அதி கடுமையாய்த்தவம் புரிந்து 10 வருஷத்தில் கிருதயுகத்தில் அடை

யக்கூடியபலனை திரேதாயுகத்தில் ஒரு வருஷத்திலும் துவாபர யுகததில்ஒரு மாதத்திலும் கலியுகத்தில் பரிசுத்தமான மனதுடன் கேசவஎன்று ஒரே தடவை சொன்னமாத்திரத்தில் அடையும்படி செய்வதால் இந்தக் கலியுகம் சிறந்ததென்று சொல்லியிருக்கிறார். முன்னோர்களானரிஷிகள் ராஜாக்கள் இவர்களால்கையாளப்பட்ட பிரசித்திபெற்ற அஸ்திரமந்திரங்களும் இந்த ஸந்தியாவந்தன கர்மத்திலேயே அடங்கியிருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கர்மா வைப் பிராமணர்கள் தவிர வாலியும் அஸுரனான பஸ்மாஸுர னும் சிரத்தையுடன் அனுஷ்டித்ததாய் ஸ்ரீமத்ராமாயணத்திலும் புராணங்களிலும் காணலாம். சாகாபேதங்களால் இககர்மாவா னது பலதரப்பட்டதாயினும் ஸந்தியாவந்தனம் என்பது ஒரே அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியது. இந்தக்காலத்தை அனுசரித்து ஸகல பிராமணர்களும் ஸந்தியாவந்தனத்தை அர்த்தம் தெரிந்து கொண்டு திரிகாலங்களிலும் சிரத்தையுடன் செய்து வந்தால்இது ஒன்றே ஸகலத்தையும் கொடுத்து மோக்ஷத்தையும் அளிக்கு மென்பதில் சந்தேகம் கிடையாது. சூரிய உதயத்துக்கு முன் வானத்தில் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் போல் பூமியில் விரள மாயிருக்கும் பண்டிதர்களிடம் இதன் வாஸ்தவார்த்தத்தைத்தெரி ந்து கொள்ளலாம். வேதபாஹ்யாளான ஜைனர், பவுத்தர், மஹம் மதியர், கிருஸ்துவர் உள்பட ஸகல மதஸ்தர்களும் யுத்தத்திலும ராஜத்துரோகம் முதலிய கடுமையான அபராதங்களிலும் கூட மனதில் ஒன்றை நினைத்துக்கொண்டு அலக்ஷியமாய் ஒரு கையை உயரத்தூக்கி மன்னிக்கவேணுமென்று ஒரே தடவை சொன்ன வுடன் அப்படிப்பட்ட மனிதனைத் தக்ஷணமே நிரபராதியாக்கி விடுகிறார்கள் இந்த ஸந்தியாவந்தனத்துககு ஆரம்பமான ஆச மனீயம் முதல் ஸாயம்கால ஸந்தியாவந்தனம் முடிவுபரியந்தம் பகவானைக்குறித்து நம: (நமஸ்காரம்) என்னும் சப்தத்தோடு கூடிய வாசகமானது சுமார் இருபதுக்கு குறையாது. பிர்மயக் ஞம் தேவரிஷி பிதுர்தர்ப்பணம் முதலிய காலங்களிலும் இதே ஆசமனீயம் உபயோகிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஆசமனீ யம் ஒவ்வொன்றிலும் பகவன்னாமங்கள் பதினைந்து தடவை உச்ச ரிக்கப்படுகிறது. நைமித்திகாசமனீயங்கள் எண்ணிறந்தவை ரேசக பூரககும்பகத்துடன் கூடிய பிராணாயாமம் என்ன பிர்ம

வித்யா காயத்ரீமஹாமந்திரத்தோடு கூடிய சூரியோபாஸ்தி யென்ன இவ்வளவும் வந்தனத்தோடு கூடிய பிர்மத்தின் வணக்க மேயாகும். ஆதி சிருஷ்டியான ஜலதேவதையின் பிரார்த்தனை யோடு கூடின மஹாபரிசுத்தமான மந்த்ரஸ்நாநமும் பிராமணன் திரிகரணங்களாலும் இரவில் செய்யும்பாபங்களைநிவர்த்திக்கும்படி பகலுக்கு அதிபதியானவனும் வேதங்களால் மண்டலமத்தியில் விளங்கிக்கொண்டிருப்பதாய் முறையிடப்படும் நாராயணனைப் பிரதானமாகவுள்ளவருமான சூரியபகவானைப் பிரார்த்திக்கும் மந்தரமும் ஸமஸ்த லோகக்ஷேமங்களுக்கும் ஆஸ்பதமான சூரியபகவான் உதயமாகும் சமயததில் ஹாருணத்வீபத்தில், மஹாவரப் பிரஸாதிகளான மந்தேஹான் என்னும் பெயருடைய ராக்ஷஸர்கள் சூரியரதத்தை மேல்செல்லவிடாமல் ஹிம்ஸிக்கும்போது ரொம்ப நியமத்தோடு பிராமணர்களால் காயத்ரீ மஹாமந்திரத்துடன் கொடுக்கும் அர்க்கிய ரூபமான ஜலத்திவலைகள் வஜ்ராயுதமாகமாறி அவ்வஸுரர்களை மடியச்செய்கிறதென்றும் அந்த பிர்ம்மஹத்திதோஷம் நிவர்த்தியாவதற்கு பூமிப்பிரதக்ஷணம் அவசியமாதலால் அர்க்யம் கொடுத்தவுடன் கரைமீதேரி தன்னைச் சுற்றிலும் ஜலத்தை விட்டுக்கொண்டு பிரதக்ஷணம் செய்ய வேண்டியதென்று சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட கர்மாவை ஜலத்திலிருந்தபடியே ஜலத்தை சுற்றிவிட்டு பிரதக்ஷணம் செய்யாமலே இருப்பதை அநேகரிடம் காணலாம் இதன் வாஸ்தவம் தெரிந்திருககும்பக்ஷத்தில் யாரும் இப்படி அலக்ஷியமாய் செய்யமாட்டார்கள். இவ்வளவு பெருமை பொருந்திய ஸந்தியா வந்தனத்தின் முடிவில் திரிகரணத்தாலும் பகவானைத் திருப்தி பண்ணிவைப்பதாய் பொருள்படும் பன்னிரெண்டு தர்ப்பணங்களும் அடங்கியிருக்கின்றன. மாத்தியான்ஹிக காலத்தில் ஒவ்வொருவருக்கும் ஆகாரநியமம் ரொம்பகவனிக்கத்தக்கதாயிருப்பதால் காலதேசங்களை அனுசரித்துப் பலவிதகெட்ட ஆகாரம் சரீரத்தில் கலந்துவிடுவதை, ஜலாதிபதியானவருணனை பிரார்த்தித்து உட்கொள்ளும் ஜலத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறது. ஸாயங் கால ஸந்தியாவந்தனத்தில் பிராமணன் பகலில்செய்த பாபங்களை போக்கடிக்கும்படி गुरुरग्निर्द्विजातीनां குருரக்நிர் த்விஜாதீநாம் பிராமணர்களுக்கு முக்கிய குரு அக்கினி ஆகையாலும் சூரியக்

பகலில் உள்ள தன்னுடைய தேஜஸ்ஸை ஸாயங்காலத்தில் அக்னியிடம் கொடுத்து விடுவதாலும் அந்தக்காலத்துக்கு அதிபதியான அக்னிபகவானை ரொம்ப வணக்கத்துடன் பிரார்த்திக்கும் மந்திரமும் ஜபத்தின் முடிவிலுள்ள வருணப் பிரார்த்தனையும் அடங்கி யிருக்கிறது. இந்தக்கர்மாவால் தினந்தோரும் மனோவாக்காயங்களால் பிராமணன் செய்யும் ஸகலபாபங்களையும் போக்கடித்து பரிசுத்தனாகிறான்.

सकृदेव प्रपन्नाय तवास्मीति च याचते ।
अभयं सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम ॥

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம் மம ॥

உன்னை நம்பினேன் என்று ஒரு தடவை மனப்பூர்வமாய்க் கேட்டுக்கொண்டவனுக்கு யாராயிருந்தாலும் அவனைக் காப்பாற்றுவது என்னுடைய முக்கிய கடமை என்று ஸ்ரீ ராமன் சொல்லியிருப்பதிலிருந்து சிருஷ்டிகளுக்கெல்லாம் உத்தமமான ஜன்மமுள்ளவன் மனிதன் அதிலும் பிராமணன் நியமத்தோடு பிரதிதினமும் அளவற்ற தடவை மனப்பூர்வமாய் ஸந்தியாவந்தன காலத்தில் வணங்கும்போது பகவான் என் காப்பாற்றமாட்டார். எல்லாமதாசாரியாளும் ஸ்ரீராமனை பிர்ம்மத்தின் அம்சமாகவே மதித்து உபதேசம் செய்திருக்கிறார்கள்.

அப்படியிருக்க ஸந்தியாவந்தன கர்மாவால் பகவானுடைய பிரஜைகளான நம்மைக்கண்டு மனமிரங்கி ஸமஸ்தபாபங்களையும் போக்கடித்து ஸர்வேசுவரன் மோக்ஷத்தை நமக்கு அளிப்பதில் தடையென்ன. இதைக்கொண்டு ஸமஸ்த ஜனங்களும் பாபிகளாயும், பாபகர்மாவில் அபிருசியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள் என்றுநான் தூஷித்துஎழுதியதாகநினைத்துவிடக்கூடாது. யதோக்தமாய் அனுஷ்டிக்கும் புண்ணியபுருஷர்களும் கணக்கற்றுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்கள். மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பிரதிதினமும் புத்திபூர்வமாயும் அபுத்தி பூர்வமாயும் அளவற்ற பாபங்கள் ஸம்பவித்து வருவது ஸஹஜமேயாகும், தன்னைப் பிராயச்சித்தம் முதலியவற்றால் பரிசுத்தமாக்கிக்கொள்ள

முயல்வது ஸர்வஸாதாரணம். இது பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. சாஸ்திர ஸம்மதமும் அப்படியே. அப்படி பரிசுத்தமாக்கக்கூடியது வேதம். தர்மசாஸ்திரங்கள் முதலியதால் நிர்ணயித்து வெகு காலமாய் அனுஷ்டிக்கப்பட்ட பிரஸித்திபெற்ற ஸந்தியாவந்தன கர்மமேயாகும். இந்தக் கர்மாவானது தற்காலம் பிராமணர்கள் தவிற மற்றவர்களுக்கு ருசிக்காது. ஆகையால் தயவு செய்து இந்த ஸந்தியாவந்தனத்தை ஸகல பிராமணர்களும் அர்த்தத்தை அறிந்து காலங்களில் அனுஷ்டித்து வரவேண்டியதென்றும் வித்தியார்த்திகளான சிறுவர்களைச் செய்துவரும்படி சிக்ஷித்தும் வந்தால் தற்காலம் உலகத்திற்கு ரொம்ப உபகாரமாயிருக்குமென்று வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதே விஷயத்தை ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியாளும் அடிக்கடி உபதேசிக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆசாரியாளுக்கு அரோககிருடகாத்ரத்தைக் கொடுத்தருளும்படி பகவானைப்பிரார்த்திக்கிறேன்.

தி. ந. தாததேசிகாசாரியார்,
கம்மாபுரம்.

ஒரு வேண்டுகோள்.

ஆர்யதர்ம பத்திரிகை பிர்பவ-ஹூ வைகாசி-மீ 6வ வெளிவந்த "ஐயவினாவிடையில்"

இப்பத்திரிக்கையானது லோககுரு ஸ்ரீமகாசன்னிதானத்தின் அனுக்கிரகத்தால்நடந்துவருவதாலும், வெகுபண்டித சிகாமனிகளும், சாத்விகாபிமானிகளும் ஆவலுடன்பார்க்கவிரும்பியுள்ள பத்திரிக்கைகளில் தலைமையானதாலும், யானும் சங்கையை அகற்றவிரும்பியதாலும், நடப்பில் முற்பட்டுள்ள பண்டிதர்கள் எனது சங்கையை அகற்ற வல்லவர்கள் என்றே நம்புகிறேன்.

அதில் முற்பாராவில் கூறியுள்ளவண்ணம் உலகத்துக்கு ஏற்படக்கூடியநன்மை தீமைகளைத் தெளிவாகக்கூறக்கூடியது "ஹோராஸ்கந்தம்" என்பது போற்றத்தக்கதே. இரண்டாவதில் கூறும்

"முகூர்த்தரஹஸ்யமும்" அவ்வாறே. மூன்றாவது பாராவில் கூறும் முகூர்த்தம் இருவகை என்பதில் சிலதைக் குறிப்பிட்டிருப்பது தவறு. எல்லா விஷயங்களிலும் சீக்கிரம் சாவகாசம் என்று இருவகையுடனிருப்பதே இயற்கைக்கு ஒற்றுள்ளது. நியாயமும் அவ்வாறுளதே. இருபத்தோரு மஹாதோஷங்களை விலக்கியிருப்பதும் மஹாபிரஸித்தமானதே. அதில் சிலது அபவாதத்தால் விலக்கியும், சிலதிற்கு அபவாதம் கூறாமல் இருப்பதையும் நன்கு கவனித்திருந்தால் அவ்வாறு எழுத முற்பட்டிருக்கமாட்டார். மறுமுறை ஆராய்ச்சி செய்யும்படி தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாலாவது பாராவில் கண்டுள்ளதுகள் என்னூலாசிரியர் கொள்கை என்பதை அறிய விரும்புகிறோம். ஐந்தாவது பாராவில் கண்ட கண்டாந்தகதோஷம் என்னூலாசிரியர் கொள்கைப்படி விலக்கவேண்டியதென்பதும், வேறு ஆசிரியர்கள் உபயோகிக்கலாமென்று கூறியிருந்தால் எக்கருத்துக்கொண்டு கூறியிருப்பார்கள் என்றும் தெரிய விரும்புகிறோம். 6வது பாராவில் கண்ட கிருஹ அமைப்புக்கு அநேக நற்குணங்களிருப்பினும் 21 மஹாதோஷங்களில் ஏதேனும் ஒன்றின் சமபந்தமிருந்தால் விலக்கவேண்டியதை கிரந்தங்கள் முறையிடுவதாகக் கூறியிருப்பது எல்லா ஆசாரியர்களும் அவ்விதம் கூறியிருந்தாலொழிய முறையிடுவதாகக் கூற முடியாது. எந்தெந்த ஆசிரியர்கள் அவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்பதை விவரமாக அறிய விருப்பமிருப்பதால் இப்பத்திரிகை வாயிலாகவே வெளியிடச்செய்யவேண்டியது. ஒன்பதாவது பாராவில் கண்ட கும்பாபிஷேக சுபகாரியங்களிலும் ஐயவினுவில் கண்ட மூன்று தோஷங்கள் இயலாது. சுபலெக்கினத்தில் நடத்தும்படி சகல சாஸ்திரங்களும் முறையிடுகின்றன என்பதை யோஜிக்குங்கால் இவ்வியாசம் எழுதியவர் முகூர்த்த சாஸ்திரசம்மந்தமாக நன்கறிந்த பண்டிதராகத்தெரியவருவதால் முகூர்த்தத்திலுள்ள சில ரகஸ்யங்களைப் பேரியோர் முகமாக அறியவெகுகாலமாய் ஆவலுடன் இருக்கும் எனக்கு, நேறிலாவது, பத்திரிகை மூலமாகவாவது, பண்டிதர்கள் முன்னிலையிலாவது எம்முறையில் சம்பாஷனை நடத்தலாம் என்பதைத் தெரியவிரும்பியுள்ளேன்.

நடப்பு சம்பாஷணையில் எனது சங்கைகளையும் தக்கஆதாரத்துடன் பத்திரிகை வாயிலாக நிரூபித்து சம்பாஷணையில் எம்

முறையில் நடத்துவது என்றும் தெரிவிக்கவேண்டும். மேலும் விபாசம்எழுதியுள்ளவர் பண்டித சகாயத்தைக்கொண்டோ, நூலாராய்ச்சியின் தன்மையைக்கொண்டோ, நமக்கு வேண்டியது, எந்தெந்த நூல்களிற் கூறியுள்ளதோ அவைகளுடைய பூர்வபக்ஷ சித்தாந்தங்களின் தன்மையை மட்டிலுமே அபேக்ஷித்துள்ளது.

அத்துடன் சகல சாஸ்திரங்களும் கூறியுள்ளதாக எழுதியுள்ள வாசகங்களை விடுத்து எந்த ஆசிரியர் கூறியது என்பதையும், அவர் இன்னார், இவ்வாறு கூறியுள்ளார் என்ற முறையில் எழுதச் செய்யவேண்டிடும்.

ந. ச. வேங்கட்டராம சாஸ்திரி.

கும்பாபிஷேக முகூர்த்தத்தைப்பற்றிய விக்ஞாபனத்திற்கு விடை.

நமது ஆர்யதர்மம் 14வது சஞ்சிகையில் கொத்தமங்கலம் சுந்தரஜோஸியர் என்பவரால் ஐயவினா என்ற பிரசுரத்தையும் 19வது சஞ்சிகையில் விக்ஞாபனமென்ற பிரசுரத்தையும் பத்ரிகாபிமானிகள் பார்த்திருக்கலாம். மேல்கண்ட கேள்விகளுக்கு சமாதானம் எழுதுவதில் பிழையிருப்பினும் "தரையில் கீரிடில் தச்சரும் காய்வரோ" வென்ற கம்பர் கூறிய நியாயம்போல அங்கீகரிக்குமாறு வேண்டுகிறேன். கெ.எஸ். சுந்தரேசசாஸ்திரியார் ஐயவினாவில் கும்பாபிஷேக முகூர்த்த விஷயத்தில் லக்னசுத்தம், பஞ்சகம், கண்டாந்தம் இவைகள் பார்க்கவேண்டியது அவசியமா? அன்று? வென்பதையறிய விரும்பி எழுதியுள்ளார். அவருக்கு அதன் தன்மை தெரிந்தவரா, அல்லவாயென்பதையறிய விருப்பமிருப்பினும், உலகத்தில் முகூர்த்தம் இருவகையாகயிருப்பதாக எனது அனுபவம், அதாவது சீக்கிரம் அவசியம் நடத்தவேண்டிய சங்கடமுடையதும் 2 சாவதானத்தில்ச் செய்துகொள்ளக்கூடியதாயுமாக மேலும்,

दिवसो गुणदोषाभ्यां मिश्रितःस्यात्परस्परम् ।
केवलं गुणसंयुक्तो देवानामपि दुर्लभः ॥

असंख्याताः स्मृता दोषास्तारकास्सप्तविंशतिः ।
दोषैस्तु विततं सर्वं दुर्लभं दोषवर्जितम् ॥
दोषान्सर्वान्परित्यक्तुं न शक्यं परिवत्सरैः ।
तस्मात्परीक्ष्य कुर्वीत स्वल्पदोषे गुणाधिके ॥

𑌶𑌿𑌵𑌶𑍋 𑌗𑍁𑌣𑌦𑍋𑌷𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌧𑌃 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌵𑌾𑌰𑌧𑍍𑌵 ।
𑌕𑍇𑌵𑌲𑌂 𑌗𑍁𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥
𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 𑌦𑍋𑌷𑌾𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌾𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 ।
𑌦𑍋𑌷𑍈𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌤𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌦𑍋𑌷𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥
𑌦𑍋𑌷𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌵𑌤𑍍𑌸𑌰𑍈𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌦𑍋𑌷𑍇 𑌗𑍁𑌣𑌾𑌧𑌿𑌕𑍇 ॥

என்று கூறியுள்ளதை அறியார் போலும், முதலில் லக்னசுத்தம் என்று எழுதியுள்ளது தவறுதலான வாசகம். லக்னத்தில் பாப யோகமிருக்கலாமாவென்று கூறவேண்டியதை விட்டுவிட்டார். 2 பஞ்சகம் முகூர்த்த விஷயத்தில் சுத்தமாகயிருப்பது விசேஷமாயினும் யாத்ராவிஷயத்தில் தான் அவசியமாகப் பார்க்கவேண்டியது 3 கண்டாந்தம்பார்க்க வேண்டியது அவசியமாயினும் அது 21 மகாதோஷங்களிலுள்ளபடியால் மகாதோஷங்களின் அபவாதத்தால் விலக்கக்கூடியதும் கூடாததுமாக இருவகைகளிருப்பதைப் படித்தறிந்தோர் கூறமாட்டார்

प्रकल्प्यचापवादविषयं तत उत्सर्गोऽभिनिविशते ।

𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌚𑌾𑌪𑌵𑌾𑌦𑌵𑌿𑌷𑌯𑌂 𑌤𑌤 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑍋𑌽𑌭𑌿𑌨𑌿𑌵𑌿𑌶𑌤𑍇 ।

என்ற பரிபாஷையில் உத்ஸர்கமாயுள்ள கண்டாந்ததோஷம் அபவாதசாஸ்திரங்களுக்கு இடத்தை விட்டு மற்ற இடத்தில் தான் தோஷமாகக் கருதப்படுமாதலால் அபவாதத்தை நாம் அறிய வேண்டும். மேலும் லக்னத்தில் குஜநிருப்பது தண்டாயுதபாணி ஸ்வாமிவிஷயத்தில் தோஷமாகமாட்டாதல்லாமல் விசேஷகுணமுடையதென்ற கீழ்வரும் நியாயங்களால் வெளியாகும்.

स्ववर्गे मित्रगे स्वोच्चे शुभयुक्ते शुभेक्षिते ।
गण्डान्तदोषमुद्भूतं सोम आशु व्यपोहति ॥

स्वर्क्षे मित्रर्क्षे स्वोच्चे शुभयुक्ते शुभेक्षिते ।
लग्नाद्दोषाष्टम[illegible] दोषं शुभा व्यपोहति ।

என்று கண்டாந்தாபவாதமும், 21வித தோஷவாத பரிசீலனத்தில் சங்கியாபரமாகக் கூறப்பட்டிருப்பதைச் சற்று கவனிக்க வேண்டி கீழுள்ளநியாயத்தைப்பரிசீலனைசெய்யவேண்டுவதாவது

केन्द्रत्रिकोणगे जीवे शुक्रे वा यदि वा बुधे ।
सर्वदोषा विनश्यन्ति पापा इव हरौ स्मृते ॥
किं च — गुरुरेकोऽपि केन्द्रस्थः शुक्रो वा यदि वा बुधः ।
दोषसंघान्निहन्त्येव केसरीवेभसंहतिम् ॥

(தொடரும்(நா. சிவசுப்பிரமணிய சாஸ்திரி,
ஹைஸ்கூல் பண்டிட்.

நோடீஸ்.

1927-ஞு ஜூலை மீ 4உக்கு பிரபவஞு ஆனி மீ 20உ திங்கட்கிழமை முதல் கும்பகோணம் அத்வைத ஸபா வித்வான்களின் 33-வது வருஷாந்திர ஸமாஜமானது ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு கும்பகோணம் ஸ்ரீமடத்தில் ஒருவாரம் வழக்கம்போல் நடைபெறும்.

2. பிரதிதினமும் காலை 7-30மணிமுதல்10-மணிவரையிலும் மாலை 3 மணிமுதல் 5-30-மணிவரையிலும்ஸ்ரீசங்கரபகவத்பாதபாஷ்யக்ரந்தங்களிலும் பிரகரண கிரந்தங்களிலும் வாதக்ரந்தங்களிலும் வாசிகலேகனவாக்யார்த்தங்களால்பரீக்ஷைகள் நடத்தப்படும்

3. 1927ஞு ஜூலை மீ 11உ திங்கட்கிழமை காலை 8-30மணிக்கு மேல் ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு பண்டிதர்களுக்கு ஸன்மானம் நடத்தப்படும்,

4, அடியில குறிப்பிட்டிருக்கிற விஷயங்களைப்பற்றி அடியில் கண்டிருக்கிற தினங்களில ராத்திரி 7-30 மணிமுதல் ஸபா பரீக்ஷாதிகாரிகள் உபன்யாஸஞ் செய்வார்கள்.

5. பின்னும் மற்றுமுள்ள சிலபண்டிதர்களும் 5—7—27 முதல் ஒருவாரம் பிரதிதினமும் மாலை 4-30மணிக்கு மேல் ஹிந்து மத விஷயமாக உபன்யஸிப்பார்கள். உபன்யாஸவிஷயம் முதல் தினம் ராத்திரி தெளிவாகத் தெரியவரும்.

௳	கிழமை	உபன்யாஸம்	விஷயம்
4	திங்கள்	திருவாதி பிரும்மஸ்ரீ சாஸ்திர ரத்னாகரம் விசுவநாத சாஸ்திரியள்	ஸ்ரீபகவத்பாதாசார்யாளவர்களுக்கே லோககுருத்வ ஸமர்த்தனம்
5	செவ்வாய்	மஹாமஹோபாத்தியாயா சாஸ்திர ரத்னாகரம் திருவிசநல்லூர் பிரும்ஸ்ரீ வெங்கிடுஸுப்பா சாஸ்திரியள்	பிராம்மணர்களுக்கு ஆகாரநியமமும், அதை விடுகிறதினாலுண்டாகும் தீமையும்
6	புதன்	சாஸ்திரதிலகம் வேதாந்தவிபூஷணம் கருங்குளம் பிரும்மஸ்ரீ க.ச. கிருஷ்ணசாஸ்திரியள்	புராணப் பிராமாண்யம்
7	வியாழன்	சாஸ்திரதிலகம்மஹோபதேசகர் சாஸ்திர ரத்னாகரம் ராஜமன்னார்குடி பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியள்	விதவாவிவாஹம்கூடாதென்பது
8	வெள்ளி	ஷை விசுவநாத சாஸ்திரியள	பிராம்மணர்களுக்கு வர்ணஸாகங்கர்யத்தினால் உண்டாகும் கெடுதி.
9	சனி	ஷை.வெங்கிடுஸுப்பா சாஸ்திரியள்	பிரபஞ்சம மித்தியை (பொய்) என்பது
10	ஞாயிறு	ஷை யக்ஞஸ்வாமி சாஸ்திரியள்	ஸ்ரீமத் பாகவதம் 11 வது ஸ்கந்தம் 29வது அத்யாயம் 16,21சுலோகங்களின் ரகஸ்யார்த்தமும் ஜீவன் முக்தியும்

ஷை உபன்யாஸங்களை எல்லோரும் கேட்டு ஸபலமடையும்படி கோரப்படுகிறது.

தங்கள் விதேயன்

ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரியள்,

அத்வைதஸபா காரியதரிசி